**அம்பலாங்கொடை பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்டம்பர் 23 ஆந் திகதி சபையின் தலைவரால் அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, அம்பலாங்கொடை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 3,928,127 இற்கான பங்களிப்பு தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை 82,534,463 தொகைக்கான 08 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துனை பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே அவதானிக்கப்பட்ட சமமின்மைகளின் கூட்டுத் தொகை ரூபா 30,428,802 தொகையாக இருந்தது.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆண்டு முதல் பெற வேண்டியிருந்த ரூபா 37,007,692 இற்கான மூலதன உதவி மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 ஆண்டு முதல் முன் கொண்டு வரப்படும் நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டி ரூபா 35,967,234 இற்கான தொகை ஒப்பந்தக்காரர்கள் விண்ணப்பித்திருந்த போதிலும் தீர்த்திருக்கவில்லை.

#### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 144,839,179 தொகை தொடர்பாக நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துகளின் பதிவேடும், ரூபா 4,095,766 தொகை கணக்கு மீதிகளுக்கான விரிவான அட்டவணைகளும், சமர்பிக்கபடாமையினால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | | | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) | நிதிப்பிரமாணம் 104 | காணாமல் போதல் மற்றும் சேதமடைதல் தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு பொறுப்பு சொல்ல வேண்டியவர்களை தீர்மானித்திருக்கவில்லை. |
| | (ii) | நிதிப்பிரமாணம் 110 | நட்டங்கள் சேதங்கள் பதிவேட்டில் நட்டம் தொடர்பாக பதிவுகள் செய்திருக்கவில்லை. |
| | (iii) | நிதிப் பிரமாணங்கள் 570,571(1)(2) | 02 வருட காலத்தை மிகைத்து கூட்டுத்தொகை ரூபா 2,589,322 தொகைக்கான 68 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (iv) | நிதிப் பிரமாணங்கள் 1645 மற்றும் 1646 | சபையின் 13 வாகனங்களுக்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொறுப்புக்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. |
| (ஆ) | 2015 ஜுன் 10 திகதிய 02/2015 இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | | ரூபா 399,400 தொகை கிரயத்தை உடைய 03 வாகனங்களை அகற்றுவதற்கு அல்லது பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கபட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,771,710 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,331,101 தொகையாக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 8,440,609 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

### 2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

முன்னைய ஆண்டுகளுக்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான நடைமுறை மற்றும் விரைவு விகிதாசரங்களின் முன்னேற்றமொன்றினை காட்டியது என அவதானிக்கப்பட்டது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 ஏக்கர் வரி

கூட்டுத்தொகை ரூபா 206,028 தொகைக்கான ஏக்கர் வரித் தொகை ஆண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்தது ரூபா 6,093 தொகை எனப்படும் 03 சதவீதமான குறைந்த பெறுமதி ஒன்றாக காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 199,935 தொகை ஆக இருந்தது. நிலுவைத் தொகையினை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158 (1) (அ) வின் பிரகாரம் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 கடை வாடகை

முன்னைய ஆண்டுகள் மற்றும் மீளாய்வாண்டு தொடர்பாக அறவிடபட வேண்டியிருந்த ரூபா 1,059,164 தொகைக்கான வாடகையில் ஆண்டின் போது 96 சதவீதம் அறவிடப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 42,070 தொகையாகக் காணப்பட்டது.

### 2.4.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 2,336,170 தொகை மற்றும் முத்திரை கட்டணமாக ரூபா 13,824,886 தொகை பெற வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) பதவியணி முகாமைத்துவம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 05 வெற்றிடங்களை நிரப்புவதற்காகவும், மிகையாக உள்ள 22 பதவிகளை முறைப்படுத்துவதற்காகவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) ஆரம்ப தொகுதியைச் சேர்ந்த இரண்டு ஊழியர்களுக்கு முகாமைத்துவ உதவியாளர் பதவியின் கடமைகள் சாட்டப்பட்டிருந்ததுடன், இரண்டு தொழிலாளர்களுக்கு சாரதி மற்றும் மின் தொழிநுட்பவியலாளர் கடமைகள் காட்டப்பட்டிருந்தது.

(iii) சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் வெளிநாடு சென்றுள்ள 11 ஊழியர்களிடம் 05 வருடத்தை விட மிகையான காலம் முதல் அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 36,624 இற்கான கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது மீடியாகொட மருத்துவ நிலையத்தில் கடமையாற்றிய பெண் வைத்தியர் பெற்றிருந்த சம்பளமற்ற விடுமுறைகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 36,718 இற்கான தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான 03 நடைமுறை கணக்குகளில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,994,907 தொகையாக காணப்பட்ட போதிலும் அப்பணத்தை முதலீடு செய்து மேலதிக வட்டி வருமானமொன்றினை உழைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134(1) மற்றும் (2) இன் பிரகாரம் நகர்சார் வசதிகளையுடைய பிரதேசங்கள் என இனங்காணப்பட்ட பிரதேசங்களில் இருந்து வீதவரி அறவீடு செய்வதற்காக உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு திறமையின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் மாதம் கொள்வனவு செய்திருந்த ரூபா 558,990 தொகை பெறுமதியான 42 டயர்களில் 20 டயர்கள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை களஞ்சித்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 660,000 கிரயத்தையுடைய பாதை செப்பனிடும் உருளை ஒன்று ஒரு வருட காலமும், குப்பை முகாமைத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த சாக்கடை பவுஸர் ஒன்றும் மற்றும் 02 டிரக்டர்களும் 02 வருட காலமாக ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.

### 3.3 திண்மக் கழிவு பொருள் முகாமைத்துவம்

நகர மற்றும் நகரத்தை சார்ந்த 04 பிரதேசங்களில் இருந்து ஒரு நாளைக்கு சேகரமாகும் 3.5 தொன் குப்பைகளிருந்து உக்கபடாத குப்பைகளை தெல்கஹ பெத்த என்ற காணியில் சுமார் 40 பரச்சஸ் காணியில் குவிக்கப்பட்டதுடன், உக்கக்கூடிய குப்பைகளை பயன்படுத்தி ஒரு வாரத்திற்கு 100 கிலோ கிராம் உரம் உற்பத்தி செய்யப்படுகிள்றது. உக்கப்படாத குப்பைகள் வளவில் பாரிய அளவில் குவிக்கப்பட்டு காணப்பட்டதுடன், இந்த குப்பைகளை அதிகமாக துர்நாற்றம் வீசுதல் மற்றும் கொசுக்கள், நுளம்பு செறிவு அதிகரித்திருப்பதனால் பொது மக்களின் சுகாதாரத்திற்கு பிரதிகூலமான பாதிப்புக்கள் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

## 4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடங்கிய 05 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 8,246,073 இற்கான சேமிப்புக்களும், 03 செலவு விடயங்களில் மதிப்பீடு ஏற்பாடு எல்லையை மிகைத்து ரூபா 27,892,830 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், 02 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 288,167 தொகையாக இருந்ததுடன், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளக கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 133 மற்றம் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் (தென்மாகாணம்) இன் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதி தபபா/யஹ/01 நா.ச.லே. இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், போதியளவு உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் செயற்படுத்துதல்

2009 ஜுன் 09 ஆந் திகதி DMA/2009 (i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரையும் சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் | முறைமையில் முக்கிய குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கடந்த ஆண்டுகள் முதல் முன்கொண்டு வரப்படும் கணக்கு மீதிகளை தீர்த்திருக்கவில்லை. |
| | (ii) நிதிக்கூற்றுக்களில் மற்றும் அவற்றோடு தொடர்புடைய அட்டவணைகளில் காட்டியுள்ள மீதிகளிடையேயான வித்தியாசத்தை சரிசெய்திருக்கவில்லை. |
| | (iii) கணக்கு மீதிகள் குறைவாகவும் மிகையாகவும் காட்டிய சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| (ஆ) நிலையான சொத்துக்கள் | (i) சொத்துக்கள் வகுப்பு அடிப்படையில் வெவ்வேறாக விவரங்கள் காட்டக்கூடிய வகையில் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணியிருக்கவில்லை. |
| | (ii) சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) திருப்பி ஒப்படைக்கப்படாத நூலகப் புத்தகங்களை திருப்பி பெற்றுக்கொள்வதற்கு அல்லது நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (iv) சபையினால் நட்டங்கள் சேதங்கள் பதிவேடு ஒன்று பேணியிருக்கவில்லை. |
| | (v) சபைக்குச் சொந்தமான ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் உப அலுவலகத்தை பழைய நிலைக்கு மாற்றியிருக்கவில்லை. |
| (இ) பணிப்பாளர் குழு முகாமைத்துவம் | (i) வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் மிகை ஊழியர்களை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) நிலுவை கடன் மீதியை அறவீடு செய்தவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (iii) முறைசார் விதமாக கடமைகள் சாட்டுதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) ஆயுர்வேத மற்றும் உப அலுவலகங்களைச் சேர்ந்த ஊழியர்களை ஆக்கபூர்வமாக உரிய கருமங்களுக்கு இணைத்திருக்கவில்லை. |
| (ஈ) வருமானம் சேகரித்தல் | (i) நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தியிருக்கவில்லை. |

| | |
|---|---|
| | (ii) வீதவரி அறவீடு செய்வதற்காக முறையான வேலைத்திட்டமொன்று ஆரம்பித்தல் தாமத நிலையில் காணப்பட்டது. |
| | (iii) ஏக்கர் வரி அறவீடு செய்வதற்கான பகுதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (iv) முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் ஆகிய வருமானங்களை நாளதுவரை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (v) மிகைப் பணத்தை முதலீடு செய்து, வட்டி வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (உ) வாகன நிருவாகம் | (i) வாகன திருத்தம் மற்றும் பராமரிப்பு பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த செயலாற்றுகை பொழிப்பு தயாரித்திருக்கவில்லை. |
| | (iii) வாகனங்களில் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்திருக்கவில்லை. |
| | (iv) செயற்படாத நிலையில் காணப்படும் வாகனங்களைத் திருத்துவதற்கு அல்லது அகற்றுவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (v) டயர்கள் வழங்குவதற்காக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |